A

# ஆண்டுப் பொதுத் தேர்வு - மாதிரி வினாத்தாள் - மார்ச்- 2023

## 12 - ஆம் வகுப்பு - கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. நிலையறிக்கை பொதுவாக வியாபாரத்தின் --------- கண்டறிய தயாரிக்கப்படுகிறது.
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) நிதிநிலை
   இ) முதல் ஈ) கணக்கீட்டு சரித்தன்மை

2. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹. 30,000, பெற்ற ரொக்கம் ₹. 1,00,000, கடன் விற்பனை ₹.90,000; கடனாளிகள் இறுதி இருப்பு ?
   அ) ₹. 30,000 ஆ) ₹. 1,30,000 இ) ₹. 40,000 ஈ) ₹. 20,000

3. ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு
   அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு
   இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

4. பொருத்துக

| | |
|---|---|
| (i) சந்தா | 1. வருவாயின வரவுகள் |
| (ii) சிறப்பு நிதி | 2. முதலின வரவுகள் |
| (iii) விளையாட்டு உபரங்கணங்கள் வாங்கியது | 3. முதலினச் செலவுகள் |
| (iv) அறக்கொடை | 4. வருவாயினச் செலவுகள் |

குறியீடுகள்:

அ) 1 2 3 4 ஆ) 3 2 4 1 இ) 4 3 2 1 ஈ) 3 1 4 2

5. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 - ன்படி வழங்கப்படும் வட்டி வீதம் ------------
   அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12% இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%

6. கூட்டாண்மை என்பது ----------- அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும்.
   அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 2

7. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்
   அ) பயன்படுத்தப்பட்டமுதல் மற்றும் சராசரி இலாபம்
   ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
   இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
   ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

8. நற்பெயர் ஒரு புலனாகா ------------ ஆகும்
   அ) கற்பனைச்சொத்து ஆ) நடப்புச்சொத்து இ) நிலைச்சொத்து ஈ) வாங்கப்பட்டசொத்து

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

9. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?
   அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்
   ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
   இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்
   ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

10. வேறுபட்ட ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.
    அ) நிலைமுதல் முறை ஆ) சராசரி இலாப முறை
    இ) உயர் இலாப முறை ஈ) மூலதனமாக்கல் முறை

11. கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது ----------
    அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
    ஆ) மறுமதிப்பீட்டுக்கணக்கிற்கு
    இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
    ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

12. ஒரு கூட்டாளி கூட்டாண்மையிலிருந்து விலகுவதற்கு காரணங்கள் ------------
    அ) கூட்டாளியின் உடல்நிலை பாதிப்பு ஆ) கூட்டாளியின் முதுமை
    இ) இதர கூட்டாளிகளுடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

13. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?
    அ) வெளியிடப்பட்ட பங்கு முதல் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலைவிட, ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.
    ஆ) குறை ஒப்பத்தில் வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்
    இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.
    ஈ) செலுத்தப்பட்ட பங்கு முதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

14. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
    அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு
    இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு

15. ஒப்பு நோக்கு அறிக்கை --------------- பத்திகளைக் கொண்டது.
    அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6

16. ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் ரொக்கமாக மாற்றப்பட வேண்டிய சொத்துகள் ----------
    அ) புலனாகும் சொத்துகள் ஆ) நிலைச் சொத்துகள்
    இ) நடப்புச் சொத்துகள் ஈ) புலனாகா சொத்துகள்

17. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
    அ) முடிவு ஆ) விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

18. Tally- ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?

அ) அனாமத்து க/கு ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு

இ) விற்பனை க/கு ஈ) முதலீடுகள் க/கு

19. பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?

அ) நீர்மைவிகிதம் - விகிதாச்சாரம்

ஆ) மொத்த இலாப விகிதம் - சதவீதம்

இ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - சதவீதம்

ஈ) புற அக பொறுப்புகள் விகிதம் - விகிதாச்சாரம்

20. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

அ) தலைமைப் பதிவு

ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்

இ) அறிக்கைகள்

ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019, மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

22. உயில் கொடை என்றால் என்ன?

23. கணபதி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹. 20,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்

24. பின்வரும் விவரங்களிலிருந்து, சராசரி இலாபத்தினை கணக்கிடவும்.

| | | |
|---|---|---|
| 2015 | இலாபம் | ₹. 5,000 |
| 2016 | இலாபம் | ₹. 8,000 |
| 2017 | நட்டம் | ₹. 3,000 |
| 2018 | இலாபம் | ₹. 6,000 |

25. அஞ்சலி மற்றும் நித்யா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் பிரமிளா என்பவரை 1.1.2018 அன்று கூட்டாளியாகச் சேர்த்தனர். அந்நாளில் அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் பகிர்ந்து தரா நட்டம் ₹. 40,000 ஆக இருந்தது. சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்வதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்



26. ஆதாயம் விகிதம் என்றால் என்ன?

27. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?

28. மிகை ஒப்பம் என்றால் என்ன?

29. நடைமுறை முதல் என்றால் என்ன?

30. விடுபட்ட தகவல்களை பூர்த்தி செய்து முழுமையான குறிப்பேட்டுப் பதிவினை தருக

பங்குகளை முனைமத்தில் வெளியிட்டால்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | ________ (50,000 × 12) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 6,00,000 | 6,00,000 |
| | ________ ப<br>பங்கு முதல் க/கு<br>________<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | ______ | 5,00,000<br>______ |

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் மூன்றினை எழுதவும்.

32. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக்கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | |
|---|---|
| 01.04.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | ₹. 15,000 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | ₹. 6,500 |
| 31.03.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | ₹. 2,500 |

33. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் மூன்று சூழ்நிலைகளைத் தரவும்

34. ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று வான்மதியை புதிய கூட்டாளியாகச் சேர்த்தபின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்:

(அ) வளாகத்தின் மதிப்பு ₹. 20,000 அதிகரிக்கப்பட்டது

(ஆ) சரக்கிருப்பு மீது ₹.6,000, அறைகலன் மீது ₹. 3,000, இயந்திரம் மீது ₹. 1,000 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தகவல்களுக்கு குறிப்பேட்டுப் பதிவினை தயார் செய்யவும்



www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

35. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹. 5,000 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4 % விதிக்கப்பட வேண்டும். எடுப்புகள்மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
2) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

36. சிறுகுறிப்பு வரைக.

(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

(ஆ) காப்பு முதல்

37. பின்வரும் விவரங்களிலிருந்து நடப்பு விகிதத்தினை கண்டறியவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய முதலீடுகள் | 40,000 | நீண்டகால பொறுப்புகள் | 5,00,000 |
| சரக்கிருப்பு | 2,00,000 | வணிக கடனீந்தோர் | 80,000 |
| நிலைச் சொத்துகள் | 80,000 | கொடுபட வேண்டிய செலவுகள் | 40,000 |

38. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2016 - 2017 (₹) | 2017 - 2018 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

39. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்

40. செயல்பாட்டின் அடிப்படையில் விகிதங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. (அ) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹. 60,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | தொகை ₹ | விவரம் | தொகை ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 25,000 | சரக்கிருப்பு | 80,000 |
| கடனாளிகள் | 90,000 | கடனீந்தோர் | 45,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 35,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 |
| கணினி | 15,000 | கைரொக்கம் | 30,000 |
| இயந்திரம் | 1,50,000 | | |



அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹. 30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹. 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

( அல்லது )

(ஆ) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹. | ₹. | சொத்துகள் | ₹. | ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | | 25,000 |
| கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | | 19,000 |
| | | 1,74,000 | | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ₹. 30,000 முதலுடன் எதிர்கால இலாபப் பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

(அ) சரக்கிருப்பின் மதிப்பு ₹. 5,000 குறைக்கப்பட வேண்டும்.

(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹. 3,000 உருவாக்கப்பட வேண்டும்.

(இ) கட்டடம் ₹. 20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

42. (அ) பாரதி இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு( 01.4.18 ) | 11,000 | அறைகலன் வாங்கியது | 15,000 |
| தொடக்க வங்கி இருப்பு ( 01.4.18 ) | 14,000 | பழைய செய்தித்தாள் விற்றது | 100 |
| கவிதை நூல்கள் வாங்கியது | 6,000 | பெற்ற நன்கொடை | 2,500 |
| செய்தித்தாள் வாங்கியது | 500 | பயணச் செலவுகள் | 500 |
| வாடகை செலுத்தியது | 2,000 | புத்தகக் கண்காட்சி செலவுகள் | 700 |
| எழுதுபொருள் வாங்கியது | 200 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,300 |
| சேர்க்கை கட்டணம் பெற்றது | 400 | அறைகலன் மீது தேய்மானம் | 1,500 |
| கூலி செலுத்தியது | 300 | இறுதி கைரொக்க இருப்பு | 6,000 |

( அல்லது )



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் மொத்தக் கடனாளிகள் கணக்கு கணக்குகளை தயாரிக்கவும்.

| 2018, ஏப்ரல் 1 அன்று இருப்புகள் | தொகை (₹) | 2019, மார்ச் 31 அன்று இருப்புகள் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,40,000 | பற்பல கடனாளிகள் | 2,20,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 8,000 |

பிற தகவல்கள்

| விவரங்கள் | தொகை (₹) | விவரங்கள் | தொகை (₹) |
|---|---|---|---|
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 6,00,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு செலுத்தியது | 30,000 |
| வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 60,000 |
| வாராக்கடன் | 16,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 4,000 |

43. (அ) பின்வரும் விவரங்கள் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.
2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹.50,000. இதில் 2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹. 5,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹. 7,000 உள்ளடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹. 6,000. 2017 ஆம் ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற 2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹. 4,000

( அல்லது )

(ஆ) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளான இலாபங்கள் முறையே ₹. 10,000, ₹.12,500, ₹.12,000 மற்றும் ₹. 11,500 .

(ஆ) வியாபாரம் கூட்டாளிகளில் ஒருவரால் நடத்தப்பட்டது. அக்கூட்டாளியின் நியாயமான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹.1,500. இந்தத் தொகை மேற்கண்ட இலாபங்களைக் கணக்கிடும் போது சேர்க்கப்படவில்லை.

44. (அ) இராஜன் மற்றும் தேவன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்களின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடவும்.



2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ₹. | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | பல்வகைச் சொத்துகள் | 2,20,000 |
| இராஜன் | 1,00,000 | | | |
| தேவன் | 80,000 | 1,80,000 | | |
| இலாப நட்டப் பகிர்வு கணக்கு | | 40,000 | | |
| | | 2,20,000 | | 2,20,000 |

2018, ஏப்ரல் 1 அன்று இராஜன் கொண்டு வந்த கூடுதல் முதல் 40,000 மற்றும் 2018, செப்டம்பர் அன்று தேவன் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹. 30,000. அவ்வாண்டின் எடுப்புகள் முறையே இராஜன் ₹. 20,000, தேவன் ₹. 10,000 ஆகும். அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ₹. 70,000

( அல்லது )

(ஆ) புராகிரஸ் வரையறு நிறுமம் 40,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று ₹. 100 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 20, ஒதுக்கீட்டின் போது ₹. 50 முதலாவது அழைப்பின் போது ₹. 20 மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 10 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

45. (அ) சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும் போது அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்.

(i) கட்டடம் மதிப்பினை ₹. 40,000 ஆக உயர்த்த வேண்டும்.

(ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ₹. 10,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டுவர வேண்டும்.

(iii) இயந்திரம் மதிப்பு ₹. 14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹. 12,000 குறைக்க வேண்டும்.

(iv) பற்பல கடனீந்தோரில் ₹. 16,000 போக்கெழுத வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

( அல்லது )

(ஆ) ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 - ன் இலாபங்கள் முறையே ₹.1,75,000, ₹. 1,50,000, மற்றும் ₹. 2,00,000

(ஆ) 2016 - ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 45,000 சேர்ந்துள்ளது.

(இ) 2017 - ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹. 30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.



www.Padasalai.Net

46. (அ) முத்து நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2017 மார்ச் 31 ₹. | 2018 மார்ச் 31 ₹. |
|---|---|---|
| 1. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |
| 2. சொத்துகள் | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |

( அல்லது )

(ஆ) நவீன், ரவி மற்றும் குமார் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை முறையே 1/2, 1/4 மற்றும் 1/4 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். குமார் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கை நவீன் மற்றும் ரவி சமமாக எடுத்துக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

47. (அ) பின்வரும் தகவல்களிலிருந்து புற அகப் பொறுப்புகள் விகிதத்தினை கணக்கிடவும்

2019,மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு ( வருவிய )

| விவரம் | ₹. |
|---|---|
| 1. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1) பங்குதாரர் நிதி | |
| அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்குமுதல் | 6,00,000 |
| ஆ) காப்பு மற்றும் மிகுதி | 2,00,000 |
| 2. நீண்டகால பொறுப்புகள் | |
| நீண்டகால கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்) | 6,00,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,60,000 |
| ஆ) இதர நடப்பு பொறுப்புகள் | |
| கொடுபடவேண்டிய செலவுகள் | 40,000 |
| மொத்தம் | 16,00,000 |



( அல்லது )

(ஆ) டெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாபம் நட்ட அறிக்கையிலிருந்து, (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாபநட்ட அறிக்கை

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| 1. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 24,00,000 |
| 2. இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 70,000 |
| 3. மொத்த வருவாய் ( 1 + 2 ) | 24,70,000 |
| 4. செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (-)80,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவுகள் | 22,30,000 |
| 5. அவ்வாண்டிற்கான இலாபம் ( 3 - 4 ) | 2,40,000 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

விடை குறிப்பு  ஆண்டுப் பொதுத் தேர்வு - மாதிரி வினாத்தாள் - மார்ச் - 2023

## கணக்குப்பதிவியல்

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ | முதல் | 1 | ஈ | ஆண்டுக்கு 6% |
| 2 | ஈ | ₹. 20,000 | 2 | இ | நிலைச்சொத்து |
| 3 | ஈ | முதலின வரவு | 3 | அ | 1 2 3 4 |
| 4 | அ | 1 2 3 4 | 4 | ஆ | விகிதம் |
| 5 | ஈ | ஆண்டுக்கு 6% | 5 | இ | சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் |
| 6 | ஈ | 2 | 6 | அ | நிலைமுதல் முறை |
| 7 | இ | சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் | 7 | இ | முதல் |
| 8 | இ | நிலைச்சொத்து | 8 | இ | 5 |
| 9 | ஈ | ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது | 9 | ஈ | முதலின வரவு |
| 10 | அ | நிலைமுதல் முறை | 10 | ஆ | குறை ஒப்பத்தில் வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் |
| 11 | அ | அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு | 11 | ஈ | 2 |
| 12 | ஈ | மேற்கண்ட அனைத்தும் | 12 | இ | நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - சதவீதம் |
| 13 | ஆ | குறை ஒப்பத்தில் வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் | 13 | இ | பங்குமுதல் க/கு |
| 14 | இ | பங்குமுதல் க/கு | 14 | ஆ | அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம் |
| 15 | இ | 5 | 15 | ஈ | ₹. 20,000 |
| 16 | இ | நடப்புச் சொத்துகள் | 16 | ஈ | ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது |
| 17 | ஆ | விகிதம் | 17 | ஆ | கொடுபட வேண்டிய செலவு க/கு |
| 18 | ஆ | கொடுபட வேண்டிய செலவு க/கு | 18 | ஈ | மேற்கண்ட அனைத்தும் |
| 19 | இ | நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - சதவீதம் | 19 | இ | நடப்புச் சொத்துகள் |
| 20 | ஆ | அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம் | 20 | அ | அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி - II

21. **2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2019) | 50,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 5,000 |
| | 55,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 7,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 48,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஏபரல் 1 ) | 40,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 8,000 |

22. **உயில்கொடை என்றால் என்ன?**

- ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு, உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும்.

23. எடுப்புகள் மீது வட்டி = எடுப்புத் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

$= ₹.\ 20,000 \times \frac{6}{100} \times \frac{4}{12}$ ( செப்டம்பர் முதல் டிசம்பர் வரை )

எடுப்புகள் மீது வட்டி = ₹. 400

24. **சராசரி இலாபம்** = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{5,000+8,000-3,000+6,000}{4} = \frac{16,000}{4} = ₹.4,000$

25. **குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 | அஞ்சலி முதல் க/கு ( 40,000 x $^5/_8$) ப<br>நித்யா முதல் க/கு ( 40,000 x $^3/_8$) ப<br>இலாப நட்ட க/கு<br>( பகிர்ந்து தரா நட்டம் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது ) | | 25,000<br>15,000 | 40,000 |

26. **ஆதாய விகிதம் என்றால் என்ன?**

- ஆதாய விகிதம் என்பது, தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப் பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

27. **கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?**

- விகிதம் என்பது, இரண்டு தொடர்புடைய அல்லது ஒன்றை ஒன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவது ஆகும்.

28. **மிகை ஒப்பம் என்றால் என்ன?**

- வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட, விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

29. **நடைமுறை முதல் என்றால் என்ன?**

- "நிதி" என்பது நடைமுறை முதலைக் குறிப்பதாகும்.
- நடைமுறை முதல் என்பது நடப்புப் பொறுப்புகளைவிட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும்.

30.

**பங்குகளை முனைமத்தில் வெளியிட்டால்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு (50,000 x 12) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 6,00,000 | <br>6,00,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>பத்திர முனைமம் க/கு<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | 6,00,000 | <br>5,00,000<br>1,00,000 |

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. **நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் மூன்றினை எழுதவும்.**

| அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| 1.நோக்கம் | இது, வியாபாரத்தின் முதலைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது | இது, வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது |
| 2.கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது, நிலையறிக்கை தயாரிக்கப்படும். | இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் பராமரிக்கப்படும் போது, இருப்புநிலை குறிப்பு தயாரிக்கப்படும். |
| தயாரிப்பின் அடிபடை | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

| | | |
|---|---|---|
| | கொண்டதல்ல. | தயாரிக்கப்படுகிறது |
| நம்பகத்தன்மை | இது, முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மை உடையது அல்ல | இது, இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால், நம்பகத்தன்மை உடையது. |
| விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது எளிது. |

32.

**சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | தொகை ₹. | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| **எழுதுபொருள்கள் பயன்படுத்தியது** : | | | | |
| தொடக்க இருப்பு | 15,000 | | | |
| **கூட்டுக** : கொள்முதல் | 6,500 | | | |
| | 21,500 | | | |
| **கழிக்க** : இறுதி இருப்பு | 2,500 | 19,000 | | |

33. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் மூன்று சூழ்நிலைகளைத் தரவும்.

i) இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும்போது
ii) கூட்டாண்மை நிறுவனத்தில், புதிய கூட்டாளி சேர்க்கப்படும்போது
iii) கூட்டாண்மை நிறுவனத்தில் இருக்கும் கூட்டாளி ஒருவர், நிறுவனத்தைவிட்டு விலகும் போது அல்லது கூட்டாளி ஒருவர் இறக்கும் போது
iv) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும் போது

34.

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 1 | வளாகம் க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு<br>( கட்டடத்தில் மதிப்பு உயர்த்துவது பதிவு செய்யப்பட்டது ) | | 20,000 | 20,000 |
| " | மறுமதிப்பீட்டு க/கு ப<br>சரக்கிருப்பு க/கு<br>அறைகலன் க/கு<br>இயந்திரம் க/கு | | 10,000 | <br>6,000<br>3,000<br>1,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ( இயந்திரம், அறைகலன், சரக்கிருப்பு மதிப்பு குறைப்பது மற்றும் கொடுபட வேண்டிய பொறுப்பு பதிவு செய்யப்பட்டது ) | | | |
| „ | மறுமதிப்பீட்டு க/கு ப<br>ஹரி முதல் க/கு<br>மாதவன் முதல் க/கு<br>கேசவன் முதல் க/கு<br>( மறுமதிப்பீட்டு இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 10,000 | <br>5,000<br>3,000<br>2,000 |

35.

1) <u>ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்</u> :

சராசரி காலம் = 6.5

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை x வட்டி வீதம் x $\frac{\text{சராசரி காலம்}}{12}$

= 5,000 x 12 (மாதங்கள் ) x $\frac{4}{100}$ x $\frac{6.5}{12}$

= ₹. 1,300

2) <u>ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்</u> :

சராசரி காலம் = 6

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை x வட்டி வீதம் x $\frac{\text{சராசரி காலம்}}{12}$

= 5,000 x 12 x $\frac{4}{100}$ x $\frac{6}{12}$

= ₹. 1,200

36.

(அ) <u>அங்கீகரிக்கப்பட்ட முதல்</u>

- இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும்.
- இது அதிகப்பட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை.
- இதனைப் ‘ பதிவு செய்யப்பட்ட முதல் ’ அல்லது ’ பெயரளவு முதல் ‘ என்றும் கூறலாம்.

(ஆ) <u>காப்பு முதல்</u>

- ஒரு நிறுமம் அதன் கலைப்பின்போது மட்டும், அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள, ஒப்பிய முதலின் ஒரு பகுதியினை ’காப்பு முதல்’ என்று அழைக்கலாம்.

37.

நடப்பு விகிதம் = $\frac{\text{நடப்பு சொத்துகள்}}{\text{நடப்பு பொறுப்புகள்}}$

நடப்பு சொத்துகள் = குறுகியகால முதலீடுகள் + சரக்கிருப்பு

= 40,000 + 2,00,000

= ₹. 2,40,000

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

நடப்பு பொறுப்புகள் = வணிக கடனீந்தோர் + கொடுபட வேண்டிய செலவுகள்

= 80,000 + 40,000

= ₹. 1,20,000

நடப்பு விகிதம் = $\frac{2,40,000}{1,20,000}$ = **2 : 1**

38.

**அருள் வரையறு நிறுமத்தின் 2016 மார்ச் 31 மற்றும் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஒப்புநோக்கும் ஆண்டுக்குரிய வருமான அறிக்கை**

| விவரம் | 2015 - 2016 | 2016 - 2017 | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| | ₹. | ₹. | ₹. | |
| விற்பனை மூலம் வருவாய் | 50,000 | 60,000 | + 10,000 | + 20 |
| கூட்டுக :இதர வருமானம் | 10,000 | 30,000 | + 20,000 | + 200 |
| மொத்த வருமானங்கள் | 60,000 | 90,000 | + 30,000 | + 50 |
| கழிக்க : செலவுகள் | 40,000 | 50,000 | + 10,000 | + 25 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 20,000 | 40,000 | + 20,000 | + 100 |

39. **கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.**

- நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணம் ஆகும்.
- நடவடிக்கைகள், சான்றாவணப் பதிவுகள் மூலமே பதியப்படவேண்டும்.
- முன்பே வரையறுக்கப்பட்ட கொள்முதல், விற்பனை, செலுத்தல், பெறுதல் மற்றும் எதிர்ப்பதிவு போன்ற சான்றாவணங்களை Tally கொண்டுள்ளது.

40. செயல்பாட்டின் அடிப்படையில் விகிதங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது?

(i) நீர்மைத்தன்மை விகிதங்கள்

(ii) நீண்டகால கடன் தீர்க்கும் விகிதங்கள்

(iii) சுழற்சி விகிதங்கள்

(iv) இலாபத்தன்மை விகிதங்கள்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ)

**சுபா என்பவரின் ஏடுகளில் 2019 , மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை**

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 45,000 | கடனாளிகள் | 90,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 35,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 | கணினி | 15,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 2,10,000 | இயந்திரம் | 1,50,000 |
| | | சரக்கிருப்பு | 80,000 |
| | | கைரொக்கம் | 30,000 |
| | 4,00,000 | | 4,00,000 |

**2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான**

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2019) | 2,10,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| | 2,40,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 40,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 2,00,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஏபரல் 1 ) | 60,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 1,40,000 |

**( அல்லது )**

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

41. ஆ)

## மறுமதிப்பீட்டுக் கணக்கு

ப வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 5,000 | கட்டடம் க / கு | | 20,000 |
| வாராஜயக்கடன் ஒதுக்கு க/கு | | 3,000 | | | |
| <u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> | | | | | |
| அமல் முதல் க/கு ( 12,000 x $\frac{7}{12}$ ) | 7,000 | | | | |
| விமல் முதல் க/கு ( 12,000 x $\frac{5}{12}$ ) | 5,000 | 12,000 | | | |
| | | 20,000 | | | 20,000 |

## முதல் கணக்கு

ப வ

| விவரம் | அமல் ₹ | விமல் ₹ | நிர்மல் ₹ | விவரம் | அமல் ₹ | விமல் ₹ | நிர்மல் ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/ இ | 91,000 | 65,000 | 30,000 | இருப்பு கீ/கொ | 70,000 | 50,000 | -- |
| | | | | வங்கி க/கு | -- | -- | 30,000 |
| | | | | மறுமதிப்பீடு க/கு | 7,000 | 5,000 | -- |
| | | | | இலாப நட்ட க/கு | 14,000 | 10,000 | --- |
| | 91,000 | 65,000 | 30,000 | | 91,000 | 65,000 | 30,000 |
| | | | | இருப்பு கீ/கொ | 91,000 | 65,000 | 30,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

42. அ)

**பாரதி இலக்கிய மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

| பெறுதல்கள் | தொகை (₹) | தொகை (₹) | செலுத்தல்கள் | தொகை (₹) |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/ கொ<br>கைரொக்கம்<br>வங்கி ரொக்கம் | 11,000<br>14,000 | 25,000 | கவிதை நூல் வாங்கியது | 6,000 |
| சேர்க்கை கட்டணம் பெற்றது | | 400 | செய்தித்தாள் வாங்கியது | 500 |
| பழைய செய்திதாள் விற்றது | | 100 | வாடகை செலுத்தியது | 2,000 |
| பெற்ற நன்கொடை | | 2,500 | எழுதுபொருள் வாங்கியது | 200 |
| இருப்பு கீ/ இ<br>வங்கி மேல்வரைப்பற்று | | 4,500 | கூலி செலுத்தியது | 300 |
| | | | அறைகலன் வாங்கியது | 15,000 |
| | | | பயணச் செலவுகள் | 500 |
| | | | புத்தகக் கண்காட்சி செலவுகள் | 700 |
| | | | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,300 |
| | | | இருப்பு கீ/ இ<br>ரொக்க இருப்பு | 6,000 |
| மொத்தம் | | 32,500 | மொத்தம் | 32,500 |

( அல்லது )

42. ஆ)

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 30,000 | ரொக்கக் க/கு<br>(பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு) | 60,000 |
| பற்பல கடனாளிகள் க/கு<br>( மாற்றுச்சீட்டு பெற்றது- இருப்பு கட்டும் தொகை ) | 42,000 | பற்பல கடனாளிகள் க/கு<br>( மாற்றுச்சீட்டு அவமதிக்கப்பட்டது) | 4,000 |
| | | இருப்பு கீ/இ | 8,000 |
| | 72,000 | | 72,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

ப **மொத்த கடனாளி கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 2,40,000 | ரொக்க க/கு ( பெற்றது) | 6,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு அவமதிக்கப்பட்டது | 4,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெற்றது | 42,000 |
| விற்பனை க/கு ( கடன் ) ( இருப்பு கட்டும் தொகை) | 6,59,000 | அளித்த தள்ளுபடி க/கு | 25,000 |
| | | வாராக்கடன் | 16,000 |
| | | இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 2,20,000 |
| | 9,03,000 | | 9,03,000 |

43. அ)

**2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

| செலவுகள் | ₹. | வருமானம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|
| | | நடப்பாண்டில் பெற்ற சந்தா | 50,000 | |
| | | **கழிக்க** : 2017ஆம் ஆண்டுக்கான சந்தா பெற்றது | 5,000 | |
| | | | 45,000 | |
| | | **கழிக்க** : 2019ஆம் ஆண்டுக்கான சந்தா பெற்றது | 7,000 | |
| | | | 38,000 | |
| | | **கூட்டுக** : 2018ஆம் ஆண்டு பெறவேண்டிய சந்தா | 6,000 | |
| | | | 44,000 | |
| | | **கூட்டுக** : 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017ஆம் ஆண்டில் முன் கூட்டிப் பெற்றது | 4,000 | 48,000 |

( அல்லது )

43. ஆ)

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{10,000+12,500+12,000+11,500}{4} = \frac{46,000}{4} = ₹.11,500$$

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| கூட்டாளிக்கு உழைப்பூதியம் வழங்குவதற்கு முன் சராசரி இலாபம் | 11,500 |
| **கழிக்க**: கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் | 1,500 |
| சராசரி இலாபம் | 10,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 10,000 x 3 = ₹.30,000

44. அ)

## தொடக்க முதல் கண்டுபிடித்தல்

| விவரம் | இராஜன் | | தேவன் | |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | ₹ |
| 2018, டிசம்பர் 31 அன்று முதல் | | 1,00,000 | | 80,000 |
| கூட்டுக : எடுப்புகள் | | 20,000 | | 10,000 |
| | | 1,20,000 | | 90,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 40,000 | | 30,000 | |
| இலாபம் ஏற்கனவே வரவு வைத்தது* | 20,000 | 60,000 | 10,000 | 40,000 |
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | | 60,000 | | 50,000 |

* இலாபம் வரவு வைத்தது = ஈட்டிய இலாபம் ₹. 70,000 - இருப்புநிலைக் குறிப்பின்படியான இலாப இருப்பு ₹. 40,000 = ₹. 30,000.

இந்தத்தொகை 2:1 என்ற இலாபப்பகிர்வு விகிதத்தில் கூட்டாளிகளுக் கிடையே பகிர்ந்தளிக்கப் படுகிறது.

**இலாபப் பகிர்வு விகிதம்**

இராஜன் = 30,000 x $\frac{2}{3}$ = ₹. 20,000

தேவன் = 30,000 x $\frac{1}{3}$ = ₹. 10,000

**முதல் மீது வட்டி கணக்கிடுதல்**

**இராஜன்**

முதல் மீது வட்டி = முதல் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

தொடக்க முதல் ( ஓராண்டு ) = ₹. 60,000 x $\frac{6}{100}$ = ₹. 3,600

கூடுதல் முதல் ( 9 மாதங்கள் ) = ₹. 40,000 x $\frac{6}{100}$ x $\frac{9}{12}$ = ₹. 1,800
( ஏப்ரல் - டிசம்பர் )

முதல் மீது வட்டி = ₹. 5,400


www.Padasalai.Net

**தேவன்**

| | | | |
|---|---|---|---|
| தொடக்க முதல் ( ஓராண்டு ) | = | ₹. 50,000 x $\frac{6}{100}$ | = ₹. 3,000 |
| கூடுதல் முதல் ( 4 மாதங்கள் ) ( செப்டம்பர் - டிசம்பர் ) | = | ₹. 30,000 x $\frac{6}{100}$ x $\frac{4}{12}$ | = ₹. 600 |
| **முதல் மீது வட்டி** | = | | **₹.3,600** |

( அல்லது )

44. ஆ)

**புராகிரஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 40,000 x 20 ) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 8,00,000 | 8,00,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு (40,000 x 20) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 8,00,000 | 8,00,000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 40,000 x 50 ) ப<br>பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 2,00,000 | 2,00,000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு (40,000 x 20) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 8,00,000 | 8,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற்றது ) | | 8,00,000 | 8,00,000 |
| | பங்கு இறுதி அழைப்பு க/கு (40,000 x 10) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு மீதான இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 4,00,000 | 4,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு இறுதி அழைப்பு க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற்றது ) | | 4,00,000 | 4,00,000 |

45. அ)

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | கட்டடம் க/கு ப<br>முதலீடுகள் க/கு ப<br>பற்பல கடனீந்தோர் க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு<br>( கட்டடத்தில் மதிப்பு உயர்த்துவது, பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் பதிவு செய்யப்பட்டது மற்றும் பற்பல கடனீந்தோர் போக்கெழுதியதை பதிவு செய்யப்பட்டது ) | | 40,000<br>10,000<br>16,000 | <br><br><br>66,000 |
| | மறுமதிப்பீட்டு க/கு ப<br>இயந்திரம் க/கு<br>அறைகலன் க/கு<br>( இயந்திரம் மற்றும் அறைகலன் மதிப்பு குறைவதை பதிவு செய்யப்பட்டது ) | | 26,000 | <br>14,000<br>12,000 |
| | மறுமதிப்பீட்டு க/கு ப<br>சீனு முதல் க/கு (40,000 x $^5/_8$)<br>சிவா முதல் க/கு ( 40,000 x $^3/_8$)<br>( மறுமதிப்பீட்டு இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 40,000 | <br>25,000<br>15,000 |

## ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| இயந்திரம் க/கு<br>அறைகலன் க/கு<br><u>மறுமதிப்பீட்டு இலாபம்</u><br>சீனு முதல் க/கு (40,000 x $^5/_8$)<br>சிவா முதல் க/கு ( 40,000 x $^3/_8$) | <br><br><br>25,000<br>15,000 | 14,000<br>12,000<br><br><br>40,000 | கட்டடம் க/கு<br>முதலீடுகள் க/கு<br>பற்பல கடனீந்தோர் க/கு | | 40,000<br>10,000<br>16,000 |
| | | 66,000 | | | 66,000 |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

45. ஆ) **சரிக்கட்டப்பட்ட இலாபங்கள்**

| விவரம் | 2016 ₹ | 2017 ₹ | 2018 ₹ |
|---|---|---|---|
| இலாபம் | 1,75,000 | 1,50,000 | 2,00,000 |
| கழிக்க: திரும்ப திரும்ப நிகழா வருமானம் | 45,000 | ---- | ---- |
| | 1,30,000 | 1,50,000 | 2,00,000 |
| கழிக்க: இறுதிச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | ---- | 30,000 | ---- |
| | 1,30,000 | 1,20,00 | 2,00,000 |
| கூட்டுக : தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | ---- | ---- | 30,000 |
| சரிகட்டப்பட்ட பின் இலாபம் | 1,30,000 | 1,20,000 | 2,30,000 |

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{1,30,000+1,20,000+2,30,000}{3} = \frac{4,80,000}{3} = ₹.1,60,000$$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 1,60,000 x 4 = **₹.6,40,000**

46. அ)

**முத்து வரையறு நிறுமத்தின் 2017 மார்ச் 31 மற்றும் 2018 மாரச் 31 ஆம் நாளைய ஒப்பீட்டு இருப்பு நிலைக்குறிப்பு**

| விவரம் | 2016 - 2017 ₹. | 2017 - 2018 ₹. | தொகையின் கூடுதல் ( + ) அல்லது குறைவு ( - ) ₹. | சதவீதத்தின் கூடுதல் ( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| 1. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 | + 40,000 | + 10 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 | + 15,000 | + 10 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 | + 7,500 | + 10 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |
| 2. **சொத்துகள்** | | | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 | + 1,00,000 | + 20 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 | - 37,500 | - 30 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

( அல்லது )

46. ஆ)

ஆதாய விகிதம் = 1 : 1

குமாரின் பங்கினை நவீன் மற்றும் ரவி ஆகியோர் சம்மாக எடுத்துக் கொள்கின்றனர்

குமாரின் பங்கு = $\frac{1}{4}$

ஆதாயப் பங்கு = விலகும் கூட்டாளியின் பங்கு × ஆதாயப் பங்கின் விகிதாச்சாரம்

நவீன் = $\frac{1}{4} \times \frac{1}{2} = \frac{1}{8}$

ரவி = $\frac{1}{4} \times \frac{1}{2} = \frac{1}{8}$

எனவே நவீன் மற்றும் ரவி ஆகியோரின் ஆதாய விகிதம் = $\frac{1}{8} : \frac{1}{8}$ அதாவது, 1 : 1

தொடரும் கூட்டாளியின் புதியப் பங்கு = பழைய பங்கு + ஆதாயப் பங்கு

நவீன் = $\frac{1}{2} + \frac{1}{8} = \frac{4+1}{8} = \frac{5}{8}$

ரவி = $\frac{1}{4} + \frac{1}{8} = \frac{2+1}{8} = \frac{3}{8}$

ஆகவே, நவீன் மற்றும் ரவி ஆகியோரின் புதிய இலாப விகிதம் = $\frac{5}{8} : \frac{3}{8}$

அதாவது, 5 : 3

47. அ)

புற அக பொறுப்புகள் விகிதம் = $\frac{\text{நீண்டகால கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$

நீண்டகால கடன் = கடனீட்டுப்பத்திரம் = ₹. 6,00,000

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்கு முதல் + காப்புகள் மற்றும் மிகுதிகள்

= 6,00,000 + 2,00,000

= ₹. 8,00,000

புற அக பொறுப்புகள் விகிதம் = $\frac{6,00,000}{8,00,000}$ = 0.75 : 1

( அல்லது )

47. ஆ)

i) மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை

= 24,00,000 - ( 18,80,000 - 80,000 )

= 24,00,000 - 18,00,000

= ₹. 6,00,000

மொத்த இலாப விகிதம் = $\frac{6,00,000}{24,00,000}$ x 100 = **25%**

ii) நிகர இலாப விகிதம் = $\frac{\text{வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் = மொத்த இலாபம் + முதலீடுகளிலிருந்து பெற்ற வருவாய் - பணியாளர் நலனுக்கான செலவு - இதரச் செலவுகள் - வரி ஒதுக்கு

= 6,00,000 + 70,000 - 2,90,000 - 1,10,000 - 30,000

= 6,00,000 + 70,000 - ( 2,90,000 + 1,10,000 + 30,000 )

= 6,70,000 - 4,30,000

= ₹. 2,40,000

நிகர இலாப விகிதம் = $\frac{2,40,000}{24,00,000}$ x 100 = **10%**

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613